JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-1- Witness
for Prosecution

CC No. 388/2025 Crime No. 222/2025 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw. 1 நித்தியா** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 01.06.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பூணாச்சியில் குடியிருந்து கொண்டு, இல்லத்தரசியாக உள்ளேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனக்கும், எனது கணவர் பிரகாசுக்கும் ஏற்பட்ட தகராறு தொடர்பாக ஏற்பட்ட காயத்திற்காக நான் அந்தியூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த போலீசார் விசாரித்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுச் சென்றார்கள். எனது கணவரின் மீது இருந்த கோபத்தினால், நான் குடும்ப சண்டையை மிகைப்படுத்தி கூறிவிட்டேன். குடும்ப பிரச்சினை என்பதால் தற்போது எனக்கும், எனது கணவருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கில் நான் எனது கணவருடன் இணைந்து சமாதான மனுவை தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் எனது கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக எனது அம்மா வீட்டில் இருந்து வந்ததாகவும், கடந்த 22.07.2025ஆம் தேதியன்று மதியம் சுமார் 2 ½ மணியளவில் எனது அம்மா வீட்டிற்கு வந்த எனது கணவர் அவருடன் வாழ என்னை அழைத்ததாகவும், நான் அவருடன் வந்ததாகவும் அப்போது எனது கணவர் என்னை கெட்ட வார்த்தைகளால் பேசி கையால் அடித்து கீழே தள்ளி எனக்கு கொலை மிரட்டல் விடுத்து, அங்கிருந்து சென்று விட்டதாகவும், பின்னர் எனக்கு ஏற்பட்ட வலிக்காக நான் அந்தியூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.01 14:59:48 +0530

கொண்டதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரி எனது கணவர் என்பதாலும், நான் அவருடன் சமாதானம் செய்து கொண்டதாலும், எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியில்லை. எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.01 14:59:53 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-2- Witness
for Prosecution

CC No. 388/2025 Crime No. 222/2025 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw.2 லெனின்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 01.06.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.07.2025–ம் தேதியன்று அதிகாலை 1:30 மணிக்கு நிலைய தலைமை காவலர் செங்கோடன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த பொழுது, அந்தியூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற அந்தியூர் தாலுகா, பூனாச்சி அஞ்சல், அட்டவணை புதூர், இந்திரா நகர், கோணமூக்கனூரில் வசிக்கும் பிரகாஷ் என்பவரது மனைவி நித்யா என்பவரது அசால்ட் இன்டிமேஷனை பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த நித்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிலைய குற்ற எண் 222/ 2025, சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351 (2) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் பகல் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான வெற்றிவேல் மற்றும் கார்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் நித்யா, ராமன், மினியம்மாள், கந்தசாமி, வெற்றிவேல் மற்றும் கார்த்திக் அவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 24.07.2025 தேதியன்று காலை சுமார் 10:30 மணியளவில் பூனாச்சி பஸ் நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி பிரகாஷ் என்பவரை தகவல்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.01 14:59:59 +0530

அடையாளம் காட்ட அவரை விசாரித்த போது, குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து, பின்னர் தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

கடந்த 18.08.2025 ஆம் தேதியன்று வாதி நித்யா என்பவருக்கு சிகிச்சை அளித்த அந்தியூர் அரசு மருத்துவமனை மருத்துவர் விஜயா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காய்ச்சான்று பெற்றேன். **காய்ச்சான்று அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 18.08.2021 தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351 (2) BNS கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், ஆவணங்கள் எதுவும் தயார் செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.01 15:00:05 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**